Name of the Newspaper: Dinamalar Date: 16/11/17

# மெட்ரோ ரயில் பணி மழையால் பாதிக்காது

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அதிகாரிகள் தீவிரம்

– நமது நிருபர் –

வடகிழக்கு பருவ மழையால், சென்னையில் நடந்து வரும் மெட்ரோ ரயில் பணிகள் பாதிக்காது என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பணிகள் தொடர்ந்து நடப்பதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதால், சமீபத்திய மழையிலும் பணிகள் ஜரூராக நடந்தன.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், தேனாம்பேட்டை ஏஜி, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை, நேரு பூங்கா – சென்ட்ரல் ஆகிய இரண்டு வழித்தடங்களில் சுரங்கத்தில் தண்டவாளம் அமைக்கும் பணிகள், சிக்னல் அமைக்கும் பணிகள் தற்போது நடந்து வருகின்றன.

இந்த வழித்தடத்தில் நிலைய கட்டுமான பணிகளும் நடக்கின்றன.

மெட்ரோ ரயில் நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் இடையே, 9.2 கி.மீ., நீளத்திற்கு மெட்ரோ ரயில் கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன.

இதில், வண்ணாரப்பேட்டை – தியாகராயர் கல்லுாரி – கொருக்குப்பேட்டை இடையே, 2, கி.மீ., சுரங்கப்பாதை பணி முடிந்து, தண்டவாளம் அமைப்பதற்கான ஆயத்த பணிகள் துவங்கப்பட்டு உள்ளன.



மழையிலும் விடாது நடக்கும் மெட்ரோ பணி. இடம்: வண்ணாரப்பேட்டை.

கொருக்குப்பேட்டை– விம்கோநகர் இடையே பாலம் அமைத்து, ரயில் பாதை அமைக்க, கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன.

இந்த பணிகள் அனைத்தும் வடகிழக்கு பருவ மழையால் பாதிக்காமல் இருக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரயில் கட்டுமான பணிகளில் 5,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர். இந்த பணிகளை 60 அதிகாரிகள் அடங்கிய குழு கண்காணிக்கிறது. சுரங்க நிலையங்களில் மழைநீர் புகாமல் இருக்க ராட்சத மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சாலைகளில் தேங்கும் மழைநீர், சுரங்கத்தில் புகாமல் இருக்க, தனியாக ஊழியர்கள் குழு நியமித்து, அந்த நீரை வடிகாலில் உடனுக்குடன் இறைக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மழை காலத்திலும், பணிகள் பாதுகாப்புடன் தடையின்றி நடக்க, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர், 24 மணி நேரமும் மெட்ரோ ரயில் பாதை மற்றும் கட்டுமான பணிகளை கண்காணித்து வருகின்றனர். இதற்காக, இக்குழுவினருக்கு பிரத்யேக தகவல் தொடர்பு வசதியும் செய்து தரப்பட்டு உள்ளது.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் சமீபத்திய மழையிலும் பணிகள் தடையின்றி நடந்தது. மழை பெய்தாலும் கட்டுமான பணிகள் பாதிக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.